செ.வெ.எண்.368/2021 நாள்.04.09.2021

# திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள கந்திலி, நாட்றம்பள்ளி மற்றும் ஜோலார்பேட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட உள்ளாட்சி தேர்தல்-2021 வாக்கு எண்ணும் மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், கெஜல்நாயக்கன்பட்டி அரசு மேல்நிலை பள்ளியில் உள்ளாட்சி தேர்தல் வாக்கு எண்ணும் மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனை தொடர்ந்து நாட்றம்பள்ளி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் உள்ளாட்சி தேர்தல் வாக்கு எண்ணும் மையத்தை, ஜோலார்பேட்டை அரசு பலவகை தொழில் நுட்பக்கல்லூரியில் உள்ளாட்சி தேர்தல் வாக்கு எண்ணும் மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஊரக பகுதிகளில் ஊரக உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2021 நடத்திடும் பொருட்டு திருப்பத்தூர், கந்திலி, நாட்றம்பள்ளி, ஜோலார்பேட்டை, மாதனூர், ஆம்பூர் ஆகிய 6 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 1,779 கிராம ஊராட்சி வார்டுகள், 208 கிராம ஊராட்சி தலைவர்கள், 125 ஊராட்சி ஒன்றிய வார்டுகள் மற்றும் 13 மாவட்ட ஊராட்சி வார்டுகள் ஆகியவற்றிற்கு உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ளது. மேலும் கொரோனா முன்னெச்சரிக்கை தடுப்புப்பணிகளான முகக்கவசம் அணிந்தும், சமூக இடைவெளியை பின்பற்றியும், கையுறை அணிந்தும் போன்ற கொரோனா தடுப்புப்பணிகளை அவசியம் பின்பற்றி உள்ளாட்சி தேர்தலை நடத்த வேண்டும். வாக்கும் எண்ணும் மையத்தில் உள்ள கட்டங்கள் பழுதுஏதும் ஏற்பட்டிருந்தால் உடனடியாக சாரிசெய்ய வேண்டும். மேலும் குடிநீர் வசதி, மின்சாரம், கழிவறை வசதி உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகளை சரிசெய்துகொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தேர்தல் நடத்தும் அலுவலர்களையும், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களையும் அறிவுறைகள் வழங்கினார்கள்.

இந்த ஆய்வுகளின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எம்.ஆர்.சிபிசக்கரவர்த்தி.இ.கா.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.செல்வராசு, மகளிர் திட்ட அலுவலர் திருமதி.உமாமகேஸ்வரி, ஊரக வளர்ச்சி துறை செயற்பொறியாளர் திரு.செல்வக்குமரன், மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**